# மலைப் பிரசங்கம்

## பாடம் - 2

### கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 6

**நோக்கம்:** கடைசி நான்கு பாக்கியங்களை புரிந்து கொள்ளுதலும், உலகத்திற்குள் செல்வதற்கு இயேசு கற்று கொடுத்த சிந்தைகள்

*இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்*
*இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்*
*சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.*
*நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.* *மத்தேயு 5:7-12*

பாக்கியங்களை அடைவது என்பதை மலை ஏறுவது போன்றது என்று கூறலாம். முதல் பகுதியில் நாம் கற்று கொண்டு “வருகின்ற” முதல் நான்கு பாக்கியங்களும் நம்மை மலை உச்சிக்கு அழைத்து சென்று விட்டது. ஆவியில் எளிமையும், துயரப்படுதலும் மலையின் பாதி உயரத்திற்கு அழைத்து சென்றது. சாந்தகுணம் இன்னமும் சற்று உயரம் அழைத்து சென்றது. நீதியின் மேல் பசிதாகம் நம்மை மலையின் உச்சிக்கு கொண்டு சென்று விட்டது. இந்த சிந்தைகள் நமக்கு தேவனோடு கூட சரியான உறவை ஏற்படுத்தியது.






திரும்பவும் மலையிலிருந்து கீழே இறங்கி வந்த பின்பு நாம் எப்படிப்பட்ட சீடர்களாக இருப்போம்? நீதியினால் நிறைந்தவர்கள் என்று கூறும்போது, பரிசேயர்களைப் போல, சட்டதிட்டங்களை மேற்கோள் காட்டி மற்றவர்களை நீதியுள்ளவர்களாயிருக்கும்படி கூறுகின்றவர்களாக காணப்படுவோமா? பிற மனிதர்களை குற்றவாளிகளென்று தீர்க்கிறவர்களாக காணப்படுவோமா? அப்படியல்ல, இயேசு கூறிய இரண்டாவது பகுதி பாக்கியங்கள் நம்மை முற்றிலும் மாறியவர்களாக, தேவனில் காணப்படுகின்ற சிந்தைகளை பிரதிபலிக்கிறவர்களாக, மலையின் அடிவாரத்திற்கு அழைத்து வரும்.

## இரக்கம்

“இரக்கம்” என்றால் நிபந்தனையற்ற அன்பு. தாவீது சங்கீதம் 23:6 இல் இவ்விதமாக எழுதுகிறார். “என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்” தொடரும் என்ற வார்த்தைக்கு அவர் உபயோகப்படுத்திய வார்த்தையின் பொருள் துரத்தி செல் என்பதாகும். தேவனின் நிபந்தனையற்ற அன்பு தாவீதின் வாழ்நாள் முழுவதும் அவனைத் துரத்தி செல்லும் என்பதாகும். நாமும் தேவனைப் போல இருக்க வேண்டுமென்றால், நாமும் பிறர் மீது இவ்விதமான அன்பு கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

1. ஐந்தாவது பாக்கியம், “இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் இரக்கம் பெறுவார்கள்” (மத்தேயு 5:6)
   (தெரிந்தெடு: பலம், இரக்கம், அன்பு, கருணையுள்ள, பலவீனம், செல்வம்)
2. சரியா? தவறா? இந்த பகுதியில் தான் வேதாகமம் முதன்முதலாக தேவனுடைய நிபந்தனையற்ற அன்பைக் குறித்து கூறுகின்றது.
3. சரியா? தவறா?: தன்னுடைய சீடர்களும் இந்த நிபந்தனையற்ற அன்பின் கால்வாய்களாக இருக்க வேண்டுமென்று இயேசு விரும்பினார்.
4. தேவனுடைய இரக்கம் நமக்கு எதை உணர்த்துகிறது? (கோடிட்டு காட்டவும்)
   அ) நமக்கு வரவேண்டிய தண்டனையை அவர் நிறுத்தி வைத்துள்ளார்.
   ஆ) நாம் அவருக்கு கீழ்ப்படிந்திருக்கும் வரை அவர் நம்மை நேசிக்கிறார்.
   இ) நாம் பெற்றுக் கொள்ள தகுதியற்றவர்களாய் இருந்த போதிலும் நம்மை ஆசீர்வதிக்கிறார்.
   ஈ) நம்மை ஆசீர்வதிப்பதற்காக நாம் பூரணராகும் வரை காத்திருக்கிறார்.
5. புலம்பல் 3:22-23 வசனங்களை வாசிக்கவும். கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் எப்போதெல்லாம் புதுப்பிக்கப்படுகிறது?
   அ) அனுதினமும்
   ஆ) வாரம் ஒருமுறை
   இ) மாதம் ஒருமுறை
   ஈ) வருடத்திற்கு ஒருமுறை
6. மல்கியா 1:1,2 வசனங்களை வாசிக்கவும். கர்த்தர் மல்கியாவோடு பேசிய முதல் வார்த்தை என்ன?
   அ) நியாயதீர்ப்பு
   ஆ) வருத்தம்
   இ) சிநேகம்
   ஈ) கீழ்ப்படிதல்

7. 1 யோவான் 4:16 வாசிக்கவும். கர்த்தரை விவரிப்பதற்கு யோவான் உபயோகித்த வார்த்தை என்ன?
அ) நியாயதீர்ப்பு ஆ) நீதி
இ) பரிசுத்தம் ஈ) அன்பு

8. இரக்கமுடைய சீடர்களின் குணாதிசயங்களை கோடிட்டு காட்டவும்.

| | |
|---|---|
| அன்புள்ள | சுய நீதி |
| தீர்ப்புசெய்கிற | பொறுமை |
| ஆசீர்வதிக்க விருப்பம் | மன்னிக்கிற சுபாவம் |
| சுயநலம் | தப்பெண்ணம் |

9. இரக்கமுள்ளவர்களுக்கு கர்த்தர் கொடுக்கிற வாக்குத்தத்தம் என்ன?

| | |
|---|---|
| சமாதானம் | நித்திய வாழ்வு |
| சந்தோஷம் | இரக்கம் |
| வெற்றி | புகழ் |

மற்றவர்கள் உங்களை இரக்கமுள்ளவர்கள் என்று கூறுகின்றார்களா? எப்படி நீங்கள் மேலும் இரக்கமுள்ளவர்களாக இருக்க முடியும்?
..........................................................................................................

## இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள்

### கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 6

நாம் இரக்கமுள்ளவர்களாக இருக்கும்போது நம் நினைவுகளின் தோற்றத்தில் பல கேள்விகள் எழும்புகிறது. அதாவது, மக்கள் பலவிதமான யோசனைகளுடன் நம்மீது அன்பு கூறுகிறார்கள். அவர்களில் பலர் சுயநலவாதிகளாக இருக்கிறார்கள். நிபந்தனையற்ற அன்பை புரிந்து கொள்வது கடினம். விசேஷமாக, இவ்விதமான அன்பை இதற்கு முன்பாக ஒருபோதும் கண்டிராத மக்களிடம் இவ்விதமான அன்பை எதிர்பார்க்க முடியாது. ஆனால் சுயநலமின்றி தேவன் நம்மேல் அன்புகூர்ந்தது போல நாமும், மற்றவர்கள் மேல் நிபந்தனையற்ற அன்பு செலுத்துவோமென்றால், உயிர்த்தெழுந்த கிறிஸ்து நமக்குள் வாசம் பண்ணுவதினால், நாம் அவருடைய அன்பின் வாய்க்கால்களாக விளங்குவோம். நமது இருதயத்தின் யோசனைகள் சுத்தமானதாக இருக்கும்.

1. ஆறாவது பாக்கியம் “ இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்”

2. சரியா? தவறா?: உண்மையான கிறிஸ்தவ அன்பு, தங்கள் ஆழமான தனிப்பட்ட தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய உள்ளங்களில் உண்டாகிறது.

3. சரியா? தவறா?: இயேசுவின் சீடர்களாக இருப்பவர்கள், பிறரிடம் எதையாகிலும் எதிர்பார்த்தே அவர்களிடம் இரக்கமுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

4. சரியா தவறா: நமது அன்பைக் காட்டிலும் இயேசுவின் அன்பு பரிசுத்தமானது.
கீழே குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகளில் சரியான பதில்களை கோடிட்டு காட்டவும்

5. 1 தீமோத்தேயு 1:5 வது வசனத்தை வாசிக்கவும். அன்பு எங்கிருந்து பிறக்கிறது?
அ) சுத்தமான இருதயத்திலிருந்து
ஆ) நல்ல நோக்கங்களிலிருந்து
இ) அதிக முயற்சியினால்
ஈ) தனிப்பட்ட ஒருவரது தோற்றத்திலிருந்து



6. 1 யோவான் 1:7-9 பகுதிகளை வாசிக்கவும். இந்த வசனங்களின்படி, நமது இதயம் எவ்வாறு சுத்தமாகிறது.
அ) கடினமான உழைப்பிலும் அதிக தியாகத்திலும்
ஆ) நமது பாவங்களை கர்த்தரிடம் அறிக்கையிடுவதினால்
இ) விசேஷித்த சடங்காச்சாரங்கள் செய்வதின் மூலமாக
ஈ) பாவத்தை தவிர்க்க வேண்டும் என்று தீர்மானிப்பதினால்

7. 1 யோவான் 1:7-9 வசனங்களின்படி யார் நமது இதயங்களை சுத்திகரிப்பார்?
அ) நம்மை நாமே சுத்திகரித்து கொள்ளலாம்
ஆ) நமது நல்ல செயல்கள் நமது அசுத்தமான செயல்களை மேற்கொள்கிறது.
இ) இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நம்மை சுத்திகரிக்கும்
ஈ) ஆலயத்தில் தலைவர்களாக இருப்பவர்கள்

8. கீழே கொடுக்கப்பட்டவைகளில் எவைகள் சுத்த இதயத்திற்கு உதாரணங்கள்?
அ) கிறிஸ்துவின் அன்பு
ஆ) நமது உண்மையான செயல்கள்.
இ) சுயநலமான எண்ணங்கள்
ஈ) பாவிகளை தவிர்ப்பது

9. ஒரு கிறிஸ்தவன், தேவையுள்ளவர்களுக்கு அன்பையும் இரக்கத்தையும் காண்பிக்கும்போது, அதற்கு பதிலாக அவன் எதிர்பார்ப்பது என்ன?
அ) நன்மதிப்பையும் அந்தஸ்தையும்
ஆ) பிறரால் ஏற்றுக்கொள்ளப்படுவது
இ) அதே அன்பையும் இரக்கத்தையும்
ஈ) எதையும் எதிர்பார்த்தல்ல

10. எவ்விதமாக இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் தேவனை தரிசிக்கிறார்கள்? சரியானவற்றை கோடிடவும்
அ) கர்த்தர் அவர்களுடைய வாழ்க்கையில் செயல்படுகிறார்
ஆ) கர்த்தர் அந்த மனிதனை தன் பக்கமாக இழுத்து கொள்கிறார்
இ) இயேசு அந்த மனிதனில் வாழ்கிறார் என்பதை கர்த்தர் வெளிப்படுத்தி காட்டுவார்
ஈ) அந்த மனிதன் கர்த்தரின் அன்பு பிறரில் வெளிப்படுவதை தெரிந்து கொள்ளுவான்

மற்றவர்களோடு கூடிய உங்கள் உறவில் எவ்விதமான நோக்கம் உடையவர்களாக இருக்கின்றீர்கள்?
..........................................................................................................
..........................................................................................................

உங்களுடைய நோக்கங்கள் உண்மையாகவே இயேசுவின்பரிசுத்தமான அன்பை வெளிப்படுத்துகின்றனவாக இருக்கின்றதா?
..........................................................................................................
..........................................................................................................

# சமாதானம்பண்ணுகிறவர்கள்

## கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 7

கர்த்தரை மனிதகுலம் விரோதித்து கொண்டது. எனவேதான் கிறிஸ்துவின் சீடர்களாக - மலையுச்சிக்கு ஏறியவர்கள் - ஒரு நோக்கத்துடன் திரும்பி வர வேண்டும் - நாம் இதற்கு ஒத்து கொள்வோமென்றால் - தேவனோடு கூடிய நமது உறவில் சரியாக இருக்கின்றோம். அதனால் மற்றவர்கள் தேவனோடு ஒப்புரவாக கர்த்தர் நம்மை உபயோகிக்க முடியும் என்ற கருத்தை தெரிவிக்கின்றது. கர்த்தரின் பணி செய்ய இருப்பவர்கள் எவ்விதமாக செயல்பட வேண்டும் என்பதைக் குறித்து ஏழாவது பாக்கியம் கூறுகின்றது.

1. ஏழாவது பாக்கியம், “சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள்” (மத்தேயு 5:9)
(தெரிந்தெடு: பலம், சமாதானம் பண்ணுகிறவர்கள், பரிசுத்தவான்கள், தேவனுடைய புத்திரர்)

2. சரியா தவறா: கர்த்தரோடு சமாதானமாயிருப்பவர்கள் ஒவ்வொருவரும், மனிதர்களை சமாதானபடுத்துகின்ற ஊழியர்களாக இருப்பார்கள்.

3. சரியா? தவறா?: சமாதானம் பண்ணுகிறவர்கள் என்றால் மனிதர்களை தேவனோடு ஒப்புரவாக செய்கிறவர்கள். மனிதர்களை ஒருவரோடொருவர் ஒப்புரவாக செய்வதற்கும் அவர்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

4. சரியா தவறா : போதகர்களும், மற்ற ஊழியக்காரர்களும் மாத்திரமே மனிதர்களை தேவனோடு ஒப்புரவாகச் செய்ய முடியும்.
2 கொரிந்தியர் 5:14-21 வரை வாசிக்கவும். பின்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ள 4 கேள்விகளிலும் சரியான விடையை கோடிட்டு காட்டவும்.

5. 14 வது வசனத்தின்படி எது நம்மை கர்த்தரின் இரட்சிப்பின் செய்தியை பிறரோடு பகிர்ந்து கொள்ளும்படி செய்கிறது.?
   அ) அவருடைய கட்டளைகள்
   ஆ) அவருடைய அன்பு
   இ) நமது குற்ற மனப்பான்மை
   ஈ) நமது தாலந்துகளும் திறமைகளும்

6. 19 வது வசனத்தின்படி தேவன் எவ்விதமாக உலகத்தை கிறிஸ்துவோடு ஒப்புரவாக்கினார்?
   அ) அவரை எப்படி திருப்திபடுத்த வேண்டுமென்று அவர் போதித்திருக்கிறார்
   ஆ) பாவத்தைப் போல வேறு எதுவும் இல்லை என்று அவர் கூறுகிறார்.
   இ) பாவம், நிர்வகிப்பதற்கு அவ்வளவு பெரிய காரியமல்ல.
   ஈ) அவர் நமது பாவங்களை எண்ணுவதில்லை.

7. 19 வது வசனத்தின்படி, இரட்சிப்பின் செய்தியை கூறுவது யாருடைய கடமை?
   அ) தேவன் தாமாகவே அதை செய்து கொள்வார் அல்லது ஒரு தூதனை அனுப்புவார்.
   ஆ) எல்லாம் வேதாகமத்தில் உள்ளது. வேண்டுமென்றால் அவர்களே அதை கண்டு கொள்ளலாம்.
   இ) நாமே அந்த செய்தியாளர்கள்.
   ஈ) நன்றாக பேசக்கூடிய, தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு சிலரிடமே இந்த ஊழியம் கொடுக்கப்பட்டுள்ளது.



8. பவுலின் மனப்பான்மையை நீங்கள் எவ்விதமாக விவரிப்பீர்கள்?
   அ) சாதாரணமானவராக
   ஆ) ஆர்வமும் சுறுசுறுப்புமுடையவராக
   இ) கோபமும் நியாயந்தீர்க்கிறவராக
   ஈ) அக்கறையும் ஆர்வமுமில்லாதவராக

9. கிறிஸ்துவின் தூதுவர்களாக அல்லது ஒருவரோடு ஒருவருக்குள்ள வேற்றுமை அகற்றி ஒப்புரவாகுதலின் ஊழியம் செய்கின்றவர்கள் கைக்கொள்ள வேண்டிய முக்கிய வழிகள் எவையெவை? (சரியானவற்றை கோடிடவும்)
   அ) சுவிசேஷத்தை பிறருக்கு விளக்கி கூறுவது
   ஆ) ஒழுங்காக ஆலயத்திற்கு செல்வது
   இ) கர்த்தருடைய அன்பையும் இரக்கத்தையும் புரிந்து கொள்ளச் செய்ய வேண்டும்.
   ஈ) மனிதர்களுடைய பாவங்களைச் சுட்டி காண்பித்து அவர்கள் இன்னமும் நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று அவர்களிடம் சொல்ல வேண்டும்.
   உ) தேவனைப் புரிந்து கொள்ள முடியாத மக்களிடம் பொறுமையாக இருக்க வேண்டும்.
   ஊ) கர்த்தருக்கும் அவர்களுக்குமிடையேயான தொடர்பு எவ்வளவு முக்கியம் என்பதை அவர்களுக்கு விளக்கி கூறுங்கள்.
   எ) பாவிகளோடு உங்கள் நேரத்தை ஒருபோதும் செலவிடாதீர்கள்.

10. ஏன் சமாதானம் பண்ணுகிறவர்கள் தேவனுடைய புத்திரர் என்று அழைக்கப்படுகிறார்கள்?
   அ) அவர்கள் கீழ்ப்படிந்து அவருடைய வேலையை செய்கிறார்கள்.
   ஆ) அவர்கள் அவரை ஒத்திருக்கிறார்கள்.
   இ) அவர்கள் அவருடைய ஆவியினால் பிறந்திருக்கிறார்கள்.
   ஈ) அவர்கள் அவருடைய நேசத்தை சம்பாதித்திருக்கிறார்கள்.



பிறர் கர்த்தரோடு ஒப்புரவாகுவதற்கு நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்?
.......................................................................................................
.......................................................................................................

நீங்கள் யாருடனாவது ஒப்புரவாக வேண்டியதுள்ளதா? யார்?
.......................................................................................................
.......................................................................................................
.......................................................................................................

நீங்கள் அதைக்குறித்து என்ன செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்?
.......................................................................................................
.......................................................................................................
.......................................................................................................

மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் ஒப்புரவாகுவதற்கு நீ என்ன செய்கிறாய்?
.......................................................................................................
.......................................................................................................
.......................................................................................................

## துன்பப்படுகிறவர்கள்

### கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 8

சமாதானம் பண்ணுகிறவர்களின் பாக்கியத்தை அடுத்து துன்பப்படுகிறவர்களின் பாக்கியம் கூறப்படுவதற்கு ஒரு காரணம் உண்டு. ஒப்புரவாகுதலின் ஊழியத்தை செய்கிறவர்கள், அடிக்கடி வேதனைத் தரக்கூடிய பின் விளைவுகளை சந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஏனென்றால் அவர்கள் தங்களைத் தாங்களே இயேசு கிறிஸ்துவோடு அடையாளப்படுத்தி இருக்கிறார்கள். சமாதானமாகிறவர்கள் தங்கள் இருவருக்கும் இடையிலான சண்டையின் நடுவே இயேசுவின் சீடர்களை வைக்கின்றார்கள். சிலவேளையில் இவர்கள் தங்கள் உயிரையே இழக்க நேரிடலாம்.

1. எட்டாவது பாக்கியம், “நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது” என்று கூறுகின்றது.
   (தெரிந்தெடு : கவலை, பலம், துன்பப்படுகிறவர்கள், உலகத்தின் செல்வம், பரலோக ராஜ்ஜியம்)

2. சரியா? தவறா?: இந்த பாக்கியம் எந்த காரணத்திற்காகவும் துன்பப்பட்ட எவருக்கும் பொருந்தும்.

3. சரியா? தவறா?: இயேசுவிற்காக தங்கள் ஜீவனை இழந்தவர்கள், இயேசுவே இராஜா என்று நிரூபித்து காட்டுகிறார்கள்.

4. கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு சரியான விடையை கோடிட்டு காட்டவும்.
   அப்போஸ்தலர் 5:40-42 வசனங்களை வாசிக்கவும். 41வது வசனத்தின்படி அப்போஸ்தலர்கள் எவ்விதமாக துன்பப்படுதலுக்கு பதில் கொடுத்தார்கள்?
   அ) பயத்தால் உறைந்து விட்டார்கள்.
   ஆ) அவர்கள் எதிர்த்து போராடினார்கள்
   இ) தலைவர்களின் சட்டங்களுக்கு கீழ்ப்படிவதென்று தீர்மானம் பண்ணினார்கள்.
   ஈ) இயேசுவின் நாமத்திற்காக அவமானம் அடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமடைந்தார்கள்.

5. 1 பேதுரு 4:12-16 வசனங்களை வாசிக்கவும். 13 வது வசனத்தின்படி கிறிஸ்தவர்கள் பாடுபடுவதை இவ்விதமாக எண்ண வேண்டும்.
   அ) வித்தியாசமானதாகவும், வழக்கத்திற்கு மாறுபட்டதாகவும்
   ஆ) கர்த்தரின் நியாயத்தீர்ப்பின் அடையாளமாகவும்
   இ) கிறிஸ்தவ வாழ்வின் ஒரு பகுதியாகவும், வழக்கமானதாகவும்
   ஈ) கையாள்வதற்கு எளிதானதாகவும்

6. 1 பேதுரு 4:14 வது வசனத்தின்படி துன்பப்படுதல் எதற்கு அடையாளம்?
   அ) தேவனுடைய ஆவியானவர் உங்கள் மேல் தங்கியிருக்கிறார்.
   ஆ) உங்கள் பாவங்களினால் ஏற்பட்ட தேவனுடைய கோபம்
   இ) நீங்கள் உலகத்தோடு ஒத்து கொள்ளாதபடியினால்
   ஈ) உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய ஆவியும் ஆசீர்வாதமும் இல்லாத படியினால்

7. இயேசுவின் சிந்தையின் மாதிரிகளாக வாழ்பவர்களை இந்த உலகம் தாக்குகிறது என்று நீங்கள் ஏன் நினைக்கிறீர்கள்?



   அ) இயேசுவின் மாதிரிகளாக இருப்பவர்கள், தாங்கள் மற்றவர்களைப் போல எப்படி இருந்திருக்க வேண்டுமோ அதற்கு மாறானதாக இருக்கிறார்கள்.
   ஆ) இயேசுவின் சிந்தை இந்த உலகத்தின் கொள்கை கோட்பாடுகளுக்கும், கலாச்சாரத்திற்கும் ஒத்துப் போவதில்லை.
   இ) இயேசுவின் சிந்தை சுயநீதியுள்ளவைகளாகவும் பிறரை குற்றப்படுத்துவதாகவும் உள்ளது.
   ஈ) பாவமும் நீதியும் எப்போதும் ஒன்றுக்கொன்று எதிரானதாகவே உள்ளது.
   உ) இயேசுவின் சிந்தைகள் சகித்து கொள்ள முடியாததாகவும் மற்றவர்களைக் குறித்து தப்பெண்ணம் கொண்டதாகவும் காணப்படுகிறது.

8. துன்பப்படும்போது வெளிப்படுகின்ற தெய்வீகமான செயல்களை கோடிட்டு காட்டவும்.

| | | |
|---|---|---|
| சந்தோஷம் | பகையுணர்ச்சி | பொறுமை |
| சமாதானம் | பழிக்குப் பழி | இரக்கம் |
| அன்பு | வாக்குவாதம் | தைரியம் |
| துதித்தல் | குற்றஞ்சாட்டுதல் | கோபம் |



கடந்த கால வரலாற்றின்படி, துன்புறுத்துதல் சபையை பலப்படுத்தியுள்ளதா அல்லது பலவீனப்படுத்தியுள்ளதா?

........................................................................................ ஏன்?

..........................................................................................................................

..........................................................................................................................

துன்பப்படும்போது உங்கள் இயற்கையான பதில் நடவடிக்கை என்ன?

..........................................................................................................................

நீங்கள் துன்பப்படும்போது தேவனின் குணாதிசயங்களை நிரூபித்து காட்ட முடியுமா? எப்படி?

..........................................................................................................................

### கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 9

பாக்கியங்கள் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை வருகின்ற பாக்கியங்கள் மற்றும் செல்கின்ற பாக்கியங்கள் என்பதாகும். மேலும் நான்கு ஈரடி செய்யுளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. வருகின்ற சிந்தைகள் தேவனை நோக்கி செல்வதையும், தேவனோடு நமக்குள்ள தனிப்பட்ட உறவையும் உட்படுத்தியதாக இருக்கின்றது. செல்லுகின்ற சிந்தைகள் என்பது கிறிஸ்துவின் சிந்தைகளை, நமக்கு மக்களோடு கூட உள்ள உறவில் செயல்படுத்துவதை உட்படுத்தியதாக உள்ளது.

முதலாவது ஈரடிச் செய்யுள் - ஆவியில் எளிமை மற்றும் துயரம் - இதன் ஆவிக்குரிய இரகசியம் என்னவென்றால்: “என்னால் செய்ய முடிந்தது என்ன என்பதல்ல, அவரால் என்ன செய்ய முடியும் என்பதாகும்.”

இரண்டாவது ஈரடிச் செய்யுள் - சாந்த குணம் மற்றும் நீதியின் மேல் பசிதாகம் - ஆவிக்குரிய இந்த இரகசியம் குறிப்பிடுவது என்னவென்றால், “என்னுடைய விருப்பம் என்ன என்பதல்ல, அவர் என்ன விரும்புகிறார் என்பதாகும்.”

மூன்றாவது ஈரடிச் செய்யுள் இருதய சுத்தத்தோடு கூடிய இரக்கம் - இந்த ஆவிக்குரிய இரகசியம் குறிப்பிடுவது என்னவென்றால், "நான் யார் அல்லது நான் எப்படிபட்டவன் என்பதல்ல அவர் யார், அவர் எப்படிப்பட்டவர் என்பதாகும்."

நான்காவது ஈரடிச் செய்யுள் - சமாதானம் பண்ணுகிறவர்கள், நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் - தேவன் நம்மை உபயோகிக்கும்போது நாம் எதை அறிக்கையிட வேண்டும் என்பதை குறிப்பிடுகிறது: "நான் என்ன செய்தேன் என்பதல்ல, ஆனால் அவர் என்ன செய்தார் என்பதே."

ஒவ்வொரு ஈரடிச் செய்யுளுடனும் இணைக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய உள் அர்த்தத்தை வாசிக்கவும். எது உங்களுக்கு புரிந்து கொள்ளவும் நடைமுறைப்படுத்தவும் இலகுவானதாக உள்ளது? எது மிகவும் கடினமானது? தேவன் விரும்புவது என்ன, அவரால் செய்யகூடியது என்ன, உங்களுடைய சொந்த எண்ணத்தைக் காட்டிலும் அவருடைய சித்தம் என்ன என்பதைக் குறித்தே உங்களை ஒருமுகப்படுத்த தேவன் உங்களுக்கு உதவி செய்யும்படி அவரிடம் கேளுங்கள்.